සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது)
All Rights Reserved]

ந. சந்திரகுமார் - M.A, M.A in Ed, M.Ed, M.phil, PhD(R)

5

EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOLS AND FOR THE AWARD OF BURSARIES.

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும், மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை.

10 - A

வினாத்தாள் - I

45 நிமிடம்

சுட்டெண் : .....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

- ★ உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
- ★ மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
- ★ இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை, இவ்வினாத்தாளிலேயே எழுதுக.
- ★ நான்கு விடைகள் தரப்பட்டுள்ள வினாக்களில் சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழ் கோடிடுக.
- ★ விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	வேற்று புள்ளிகள்
02	
03	
04	
05	
06	
07	
08	
மொத்தம்	
இறுதிப் புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

பக்க இலக்கம்	வேற்று புள்ளிகள்
முதலாவது பரீட்சைப் புள்ளி வழங்கும் திட்டத் திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என	V/I/T
உறுதிப்படுத்தமுடியாத. இரண்டாவது பரீட்சைத் முதலாவது பரீட்சையின் மதிப்பீடு எதிரெனை உறுதிப்படுத்தமுடியாத.	V/I/T
மதிப்பிட்டு புள்ளிகளை உறுதிசெய்தும் பரீட்சைத் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும், இறுதிப் புள்ளிகளும் எதிரெனை உறுதிப்படுத்தமுடியாத.	V/I/T/EMF
திருத்த பரீட்சைத் மேற்பார்வை செய்தேன். இறுதிப் புள்ளிகள் விபரம்.	V/I/T/CH

www.tkeou.lk

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk || www.lkedu.lk

76667-4945

பாலர் வகுப்பு முதல் A/L வரை

தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல

- ICT
- Maths
- English
- Tamil
- History
- Science

zoom Online வகுப்புக்கள்

" மகத்தான கல்விக்கு உங்கள் ஆசான் "






Contact

76667-4945

தனித்துவமான
புலமைப்பரிசில் பரீட்சை
வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5
வரை நடைபெறுகின்றன


☞ 1ஆம், 2ஆம் வினாக்களில் ஓர் உரு, ஏனைய உருக்களிலிருந்தும் வேறுபடுகின்றது. வேறுபடும் உருவைத் தெரிவு செய்க.

(1)



(1) (2) (3)


(2)



(1) (2) (3)

☞ 3, 4 ஆம் வினாக்களிலுள்ள மூன்று அடைப்புக்களில் ஒன்று அதிலுள்ள உருக்களுக்கு ஏற்ப, ஏனைய உருக்களிலிருந்து வேறுபடுகிறது. அவ்வடைப்பைத் தெரிவு செய்து, கோடிடுக.

(3)



(1) (2) (3)

(4)




(1) (2) (3)

www.lkedu.lk

சுட்டெண் : .....


☞ 5, 6 ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள கோலத்திற்கு ஏற்ப, வெற்றிடத்திற்குப் பொருத்தமான எண்ணைத் தெரிவு செய்க.

(5)




(1) 58
(2) 60
(3) 66

(6)



(1) 28
(2) 24
(3) 20

(7) அடைப்பினுள் தரப்பட்டுள்ள தளவடிவங்களில் எவற்றைப் பயன்படுத்தி முறையே உருளையையும், கூம்பகத்தையும் ஆக்கலாம்?



(1) D C G , A B E F I

(2) A C G , A B E F I

(3) A C G , D B E F I


(8) கவிதையின் பாடலடிகள் ஒழுங்கின்றித் தரப்பட்டுள்ளன.


A - கருமந் தொடங்கும் போது
B - காலம் பார்க்க வேண்டும்.
C - பருவம் பார்த்து நாங்கள்
D - பயிரைச் செய்தல் வேண்டும்.

கவிதை வரிகள் மிகப் பொருத்தமான ஒழுங்கில் வரிசைப்படுத்தப்பட்டுள்ள விடையைத் தெரிவு செய்க.

(1) CADB (2) CDBA (3) CDAB

(9) உருவிலுள்ள 20 சென்ரிமீற்றர் நீளமுள்ள கம்பியொன்றை இரு நுனிகளும் சந்திக்குமாறு வளைத்துப் பெறத்தக்க உரு எது?





(1) (2) (3)

(10) 2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் மே மாதம் 31 ஆந் திகதி வரையுள்ள நாட்களின் எண்ணிக்கை யாது?

(1) 149 (2) 151 (3) 152

☞ கொழும்பிலிருந்து 210 கிலோமீற்றர் தூரத்திலுள்ள நகரமொன்றை நோக்கி பேருந்து, கார், சிற்றூர்ந்து ஆகியன மாறா வேகத்தில் புறப்பட்டுச் சென்ற விதம் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

வாகனம்	புறப்பட்ட நேரம்	மாறா நேரம் (மணித்தியாலத்திற்கு)
1. பேருந்து	மு.ப. 6.30	50km / மணி
2. கார்	மு.ப. 7.00	70km / மணி
3. சிற்றூர்ந்து	மு.ப. 7.30	60km / மணி

(11) மூன்று வாகனங்களும் நகரைச் சென்றடைந்த ஒழுங்குவரிசை.

(1) பேருந்து, சிற்றூர்ந்து, கார் (2) கார், பேருந்து, சிற்றூர்ந்து

(3) சிற்றூர்ந்து, பேருந்து, கார்

(12) குறித்த நகருக்குக் கடைசியாகச் சென்றடைந்த வாகனம் எத்தனை மணிக்கு சென்றடைந்தது?

(1) மு.ப. 11.00 (2) மு.ப. 11.12 (3) மு.ப. 11.30

(13) பருமனின் ஒழுங்குமுறைப்படி இறங்கு வரிசைப்படுத்தப்படுத்தப்பட்ட அடைப்பைத் தெரிவு செய்க.

(1)
- ★ கிலோகிராம்
- ★ கிராம்
- ★ மில்லிகிராம்
- ★ லீற்றர்

(2)
- ★ மாகாணம்
- ★ மாவட்டம்
- ★ கிராமம்
- ★ நகரம்

(3)
- ★ சமுத்திரம்
- ★ கடல்
- ★ நதி
- ★ குளம்


(14) ரொனி தனது 4வது பிறந்தநாளை இற்றைக்கு இரு ஆண்டுகளுக்கு முன்னர் கொண்டாடினான். அன்று அனுலாவின் வயது 10 வருடங்களாக இருந்தது. இதற்கேற்ப ரொனியினதும், அனுலாவினதும் வயதுகள் தொடர்பான சரியான கூற்று எது?

(1) தற்போது ரொனியின் வயது அனுலாவின் வயதின் இரு மடங்காகும்.

(2) தற்போது அனுலாவின் வயது ரொனியின் வயதின் இரு மடங்காகும்.

(3) இன்னும் இரண்டு வருடங்களில் ரொனியின் வயது இரண்டு மடங்காகும்.


(15) உருவில் நிழற்றப்பட்ட பகுதியை மொத்த உருவின் பின்னம் எது?





(1) $\frac{1}{4}$ (2) $\frac{1}{7}$ (3) $\frac{1}{8}$

www.lkedu.lk

(16) $\frac{1}{4} + \frac{1}{8}$ அடைப்பினுள் தரப்பட்டுள்ள பின்னங்களின் கூட்டுத்தொகைக்குச் சமமான உருவைத் தெரிவு செய்க.


(1) 


(2) 

(3) 


(17) தொடக்கத்திலுள்ள உருவை மேலேயிருந்து பார்க்கும் போது தோன்றும் விதம் எது?



(1) 

(2) 


(3) 


(18) 


பாடசாலையொன்றிலுள்ள தரம் 5A, 5B, 5C, 5B வகுப்புக்களில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோரை உருவில் தரப்பட்டுள்ளது. தரம் 5A வகுப்பிலுள்ள மாணவர்களில் 12 பேர் சித்தியடைந்தனர் எனில், குறித்த பாடசாலையில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர் தொகை எத்தனை?


(1) 60 (2) 72 (3) 80

(19) சதுரமுகியொன்றின் வரிப்படம் உருவில் தரப்பட்டுள்ளது. இந்த சதுரமுகியை உருவாக்கப் பயன்படுத்தப்பட்ட வெட்டுருவைத் தெரிவு செய்க.



(1) 


(2) 

(3) 

(20) "விகடகவி" என்பதை குறியீட்டில் ⊠○△○⊠ என எழுதலாம். இதற்கேற்ப "அகடவிகடம்" என்பதை குறியீட்டில் எழுதப்பட்டுள்ள விதம் எது?

(1) ●○△⊠○△○ (2) □○△⊠○△● (3) □○△⊠○△●

(21) பின்வரும் இரு திண்மவுருக்கள் பற்றிய சரியான கூற்றைத் தெரிவு செய்க.



உரு A உரு B

(1) இரு உருக்களிலும் உச்சிகளின் எண்ணிக்கை சமமானது.

(2) உரு A யை விட, உரு B யில் விளிம்புகளின் எண்ணிக்கை குறைவு.

(3) உரு B யை விட, உரு A யில் முகங்களின் எண்ணிக்கை குறைவு.


(22) ரொனியின் வீட்டிலிருந்து பாடசாலைக்குள்ள தூரம் 12 கிலோமீற்றர்களாகும். அவன் பாடசாலைக்கு அத்தூரத்தின் $\frac{1}{3}$ பகுதியை நடந்து சென்றான். மிகுதியான தூரத்தில் $\frac{1}{2}$ பங்கை, பேரூந்திலும் மிகுதியை சைக்கிளிலும் சென்றான். ரொனி பேரூந்தில் சென்ற தூரம் எவ்வளவு?

(1) 6km (2) 4km (3) 3km

(23) மலேசியாவின் நேரம் இலங்கையின் நேரத்திலும் பார்க்க 4 மணித்தியாலம், 30 நிமிடங்கள் அதிகமாகும். தினம்தோறும் ஒரு ஒரு மணித்தியாலம் முந்திக் காட்டும் கடிகாரம் பி.ப.2.35 மணியைக் காட்டும் போது, மலேசியாவில் நேரம் என்ன?

(1) பி.ப. 5.05 (2) பி.ப. 5.35 (3) பி.ப. 6.05

☞ உருவில் தரப்பட்டுள்ள வரிப்படத்தின் உதவியுடன் சரியான விடையைத் தெரிவு செய்க.




(24) ஒரு பந்து, ஒரு கிரிக்கட் மட்டை ஆகியவற்றை வாங்க எவ்வளவு பணம் தேவை?

(1) ரூபா 345 (2) ரூபா 325 (3) ரூபா 310

(25) 4 பந்துகள், 2 கிரிக்கற் மட்டை ஆகியவற்றை வாங்குவதற்கு எவ்வளவு பணம் தேவை?

(1) ரூபா 875 (2) ரூபா 860 (3) ரூபா 850

(26) உருவிலுள்ள செவ்வகத்திலிருந்து 3cm நீளமும், 1cm அகலமும் கொண்ட, எத்தனை சிறிய செவ்வகங்களை வெட்டி எடுக்கலாம்,




(1) 11 (2) 10 (3) 9

(27) **"RABBIT"** என்பதை முகம் பார்க்கும் கண்ணாடியில் பார்க்கும் போது தோன்றும் விதம்.

(1) TIBBAR (2) TIBBAR (3) TIBBAR

www.ikeou.lk

☞ கீழே தரப்பட்டுள்ள உருவைக் கவனத்திற் கொண்டு, சரியான விடையைத் தெரிவு செய்க.



(28) தமிழ் பாடத்தை விரும்பாத மாணவர்களைக் கொண்ட கூட்டம் எது?
(1) BGF (2) BCE (3) BCF


(29) சுற்றாடல் பாடத்தையும், தமிழ் பாடத்தையும் விரும்பாத மாணவர் யார்?
(1) B (2) F (3) C



(30) 5 நண்பர்கள் ஒரு இடத்திலிருந்து 40 கிலோமீற்றர் தூரத்திலுள்ள நகரம் ஒன்றுக்கு பாத யாத்திரை சென்றனர். 5 நண்பர்களும் பாத யாத்திரை சென்ற மொத்தத் தூரம் எவ்வளவு?
(1) 8km (2) 40km (3) 200km

(31) ஒரு பூங்காவிலுள்ள 12 பேர்களிடையே 10 பேர் குடையையும், 6 பேர் தொப்பியையும் வைத்துள்ளனர். சிலர் குடையும், தொப்பியும் வைத்துள்ளனர். இவ்வாறு குடை, தொப்பி இரண்டையும் வைத்துள்ளவர்கள் எத்தனை பேர்?
(1) 2 (2) 3 (3) 4

☞ பின்வரும் கோலத்தை அவதானித்து, சரியான விடையைத் தெரிவு செய்க.

(32) **98183, 8183, 183, _____**
(1) 18 (2) 83 (3) 38

(33)  _____

(1)  (2)  (3) 

(34) நகரமொன்றில் அஞ்சலகம், பூங்காவிலிருந்து மேற்கே 100m தூரத்திலும், பாடசாலை, பூங்காவிலிருந்து வடக்கே 120m தூரத்திலும், மைதானம் பாடசாலைக்கு கிழக்கே 100m தூரத்திலும் உள்ளன. இதற்கேற்ப அஞ்சலகம் இருப்பது மைதானத்திலிருந்து.....
(1) 100 மீற்றர் தெற்கே (2) 120m வடக்கே (3) 200m மேற்கே

☞ ரொனி ஒரு ஆண்பிள்ளை ஆவான். ரொனியின் அக்காவுக்கு 3 ஆண் சகோதரர்களும், 2 சகோதரிகளும் உண்டு. இத்தகவல்களைப் பயன்படுத்தி சரியான விடையைத் தெரிவு செய்க.


(35) ரொனிக்கு எத்தனை சகோதரர்கள் உள்ளனர்?

(1) 3 (2) 2 (3) 1

(36) ரொனிக்கு எத்தனை சகோதரிகள் உள்ளனர்?

(1) 5 (2) 3 (3) 2

(37) உருவில் தரப்பட்டுள்ள தளவடிவங்களில் ஒரே வடிவத்தைக் கொண்ட வடிவங்கள் எவை?



(1) Aயும், Dயும் (2) Bயும், Eயும் (3) Aயும், Eயும்

☞ தரப்பட்டுள்ளவற்றிடையே மூன்றை ஒரு கூட்டமாகவும், இரண்டை வேறொரு கூட்டமாகவும் ஆக்கலாம். அவற்றில் மூன்றும் இருக்கும் கூட்டத்திற்கு உரியவை யாவை?

(38) கட்டில், யன்னல், கதிரை, மேசை, கதவு

(1)
★ கட்டில்
★ யன்னல்
★ கதவு

(2)
★ கட்டில்
★ மேசை
★ கதிரை

(3)
★ யன்னல்
★ கதவு
★ மேசை


(39) உளி, அரம், கைவாள், சவள், கோடரி

(1)
★ உளி
★ அரம்
★ கைவாள்

(2)
★ உளி
★ கைவாள்
★ கோடரி

(3)
★ அரம்
★ சவல்
★ கோடரி

(40) உருவிலுள்ள A, B, C என்னும் சதுரங்கள் ஒன்றையொன்று ஒத்தவை. அதில் நிழற்றப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவு 20 சதுர சென்ரிமீற்றர் ஆகும். முழு உருவத்தினதும் பரப்பளவு பற்றிய சரியான கூற்று யாது?



(1) 100 சதுர சென்ரிமீற்றரிலும் குறைவாகும்.
(2) 100 சதுர சென்ரிமீற்றருக்குச் சமமாகும்.
(3) 100 சதுர சென்ரிமீற்றருக்கு கூடியதாகும்.

[பெறு ம திகைமி ஏரிரிஜி]
முழுப் பதிப்புரிமையுடையது)
All Rights Reserved]

ந. சந்திரகுமார் - M.A, M.A in Ed, M.Ed, M.phil, PhD(R)

5

EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOLS AND FOR THE AWARD OF BURSARIES.

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும், மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை.

10 - B வினாத்தாள் - II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

சுட்டெண் : .....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

- ★ உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக் கோட்டின் மீது** எழுதுக.
- ★ மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- ★ இவ்வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ளன. **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை, இவ்வினாத்தாளிலேயே எழுதுக.**
- ★ நான்கு விடைகள் தரப்பட்டுள்ள வினாக்களில் **சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழ் கோடிடுக.**
- ★ விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
02	
03	
04	
05	
06	
07	
08	
மொத்தம்	
இறுதிப் புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத் திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
மதிப்பிட்டு புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும், இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T/EMF
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப் புள்ளிகள் சரியாகும்.	V/I/T/CH

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

01. பின்வரும் பந்தியை நன்றாக வாசிக்க.

கணினி மூலம் நாம் பல்வேறு பயன்களைப் பெற்றுக் கொள்ளலாம். கடிதங்களை அச்சுப் பொறித்துப் பிரதிகள் எடுக்கலாம். தூரப் பிரதேசங்களில் வாழ்பவருக்கு மின் அஞ்சல் (ஈமெயில்) மூலம் எமது ஒளிப்படங்களையும், தகவல்களையும் அனுப்பலாம். பல்வேறு விளையாட்டுக்களை விளையாடலாம். இறுவட்டு (டிஸ்க்) மூலம் படங்களையும், பாடல் களையும் கேட்டும், பார்த்தும் மகிழலாம். இவை யாவற்றுக்கும் மேலாக இந்த உலகையே கிராமமாக்கி மனிதர் ஒவ்வொருவரையும் இணைக்கின்ற இணையத்தின் ஊடாகப் பல்வேறு தகவல்களையும் பெறலாம்.

கேட்கப்பட்ட வினாக்களுக்குரிய விடைகளைப் பந்தியிலிருந்து தெரிந்தெடுத்து, **புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

(i) எமக்கு கணினி மூலம் கிடைக்கும் பயன் ஒன்றை எழுதுக.
_____

(ii) இந்த உலகத்தைப் பூகோளக் கிராமமாக்கி, மனிதர் ஒவ்வொருவரையும் இணைக்க உதவுவது எது? _____

(iii) வெளிநாட்டில் வசிக்கும் ஒருவருக்கு மிக விரைவாக தகவல்களை அனுப்ப உதவுவது எது? _____

(iv) "மடல்கள்" என்பதன் ஒத்தகருத்தைத் தரும் சொல்லை பந்தியிலிருந்து தெரிந்தெடுத்து எழுதுக. _____

(v) உயர்திணை, படர்க்கை, ஒருமைச்சொல் ஒன்றை பந்தியிலிருந்து தெரிந்து எழுதுக. _____

(vi) கடிதங்களை அச்சுப் பொறித்து பிரதி எடுக்க உதவுவது எது? _____

02. கீழே இருக்கும் வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவுசெய்து, **அதன் கீழ் கோடிடுக.**

(i) வீட்டின் மேற்பகுதி _____ (கூரை / கூறை) என அழைக்கப்படும்.

(ii) கழுகு, ஆந்தை போன்ற பறவைகள் ___(ஊன் / ஊண்) உண்ணும் இயல்புடையது.

03. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவுசெய்து, **அதன் கீழ் கோடிடுக.**

(i) இலத்திரனியல் ஊடகங்களில் வெளிவரும் தகவல்கள் மிகவும் _____ (பயன்மிக்கது. / பயன்மிக்கவை.)

(ii) _____ (தங்க நகை / தங்க நகைகள்) பள பளவென்று மின்னியது.

(iii) அவரது பெயரும், புகழும் உலகெங்கும் _____ (பரவியது. / பரவின.)

(iv) புள்ளி மான்கள் கூட்டங் கூட்டமாக காட்டில் _____ (வாழ்கின்றது. / வாழ்கின்றன.)

04. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களால் இருக்கும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து, **அதன் கீழ் கோடிடுக.**

(i) ரொனி வகுப்பறையில் **இரண்டுங் கெட்டான்** நிலையில் தவித்தான். இதில் வரும் **இரண்டுங் கெட்டான்** என்பதன் கருத்து _____ (சரி பிழை தெரிந்தவன். / நன்மை, தீமை அறியாதவன்.)

(ii) அனுலா பரீட்சை நெருங்குவதால் **கண்ணுங்கருத்துமாய்ப்** படித்தாள். இதில் வரும் **கண்ணுங்கருத்துமாய்** என்பதன் கருத்து _____ (இரவு பகலாக / முழுக் கவனத்துடன்)

(iii) குரு, அழகான வீடு கட்டுவதை அறிந்து சிலர் **வயிற்றெரிச்சல்** அடைந்தனர். இதில் வரும் **வயிற்றெரிச்சல்** என்பதன் கருத்து _____ (ஆச்சரியம் / பொறாமை)

05. கீழே தரப்படடுள்ள கவிதையில் உள்ள **வெற்றிடத்தைப்** பூரணப்படுத்துக.

பலவும் படித்து நீங்கள்
பட்டம் பெற்ற போதும்
_____
ஒழுகிக் கொள்ள வேண்டும்.

06. கீழே தரப்பட்டுள்ள கவிதையை வாசித்து, கேட்கப்பட்டுள்ள வினாவுக்குரிய விடைகளைப் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

இடர் வரும் போதும் - உள்ளம்
இரங்கிடும் போதும்
உடன் பிறந்தவர் போல் - மாந்தர்
உறவு கொள்வர் அப்பா.

உடன் பிறந்தவர்கள் போல மனிதர்கள் எப்போது உறவு கொள்வார்கள்?

_____

07. பின்வரும் பிராணியின் **மரபொலியை** எழுதுக.

- பல்லி சொல்லும், வண்டு - _____

08. பின்வரும் வாக்கியத்திற்குரிய **நிறுத்தற்குறிகளை** இடுக.

(i) ஐயா உங்களுடன் நான் கதைக்க வேண்டும்.

(ii) உலை வாயை மூடலாம் ஊர் வாயை மூட முடியுமா

09. கீழே தரப்பட்டுள்ள சொற்றொடருக்குரிய **தனிச்சொல்லை** எழுதுக.

(i) உயிர்களுக்கு தீங்கு செய்வதையும், வன்முறையில் ஈடுபடுவதையும் தவிர்த்தல்.

_____

(ii) ஒருவர் தானே தன் கதையைக் கூறுதல். _____

(iii) அறவழிப் போராட்டம் மூலம் எதிர்ப்பைத் தெரிவிக்கும் முறை _____

10. கீழே தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள **வாக்கியத்தை** எழுதுக.

- போன்றன. / நல்ல / சிறந்த / நண்பர்களைப் / நூல்கள்

_____

11. கீழே தரப்பட்டுள்ள ஆங்கில வாக்கியங்களிலுள்ள வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து, **அதன் கீழ் கோடிடுக.**

(i) You _____ (has / have) done well.

(ii) I _____ (am / is) coming to the class.

www.kedu.lk

12. கீழே தரப்பட்டுள்ள ஆங்கில வாக்கியங்களின் கருத்தைத் **தமிழில்** எழுதுக.

(i) Shall we pluck flowers? _____

(ii) Please come to school everyday

_____

13. கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தின் கருத்தினை **ஆங்கிலத்திற்கு மாற்றி, ஆங்கில எழுத்துக்களில்** எழுதுக.

- உங்கள் சுகம் எப்படி? - _____

14. கீழே தரப்பட்டுள்ள **சிங்களச் சொல்லின் கருத்தை தமிழில்** எழுதுக.

(i) இரிதா - _____

(ii) வ(ந்)துரா - _____

15. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தைத் **தமிழில்** எழுதுக.

- இது எனது கதிரை - _____
- பிள்ளைகள் விளையாடுகிறார்கள் - _____

16. உங்கள் பாடசாலையில் நடைபெற்ற கலைவிழா தொடர்பாக உங்களது அனுபவம், மனதில் தோன்றிய எண்ணங்கள் போன்றவற்றை எமது பாடசாலை கலை விழா எனும் தலைப்பில் **மூன்று** வாக்கியங்களை எழுதுக. **(ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு மேல் இடம்பெற வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்புகளும், எழுத்துக் கூட்டலும் சரியாக இருக்க வேண்டும்.**

1. _____

_____

2. _____

_____

3. _____

_____

☞ **தரப்பட்டுள்ள வெற்றிடங்களில் விடைகளை எழுதுங்கள்.**

17. (i) **9067** என்பதை சொற்களில் எழுதுக. _____

(ii) **9999** க்கு பின்னால் வரும் எண்ணில் நூறினிடத்துப் பெறுமானத்தை எழுதுக. _____

18. | | |
|---|---|
| 8 | 5 |
| | 6 |
| 4 | |

அடைப்பிலுள்ள எல்லா இலக்கங்களையும், பயன்படுத்தி மிகப் பெரிய எண்ணையும், மிகச் சிறிய எண்ணையும் எழுதி, இரு எண்களுக்கும் இடையிலான வித்தியாசம் எவ்வளவு? _____

19. ஒரேயளவான ஆறு செவ்வகங்களைப் பயன்படுத்தி ஆக்கத்தக்க திண்மவுருவிலுள்ள விளிம்புகளையும், உச்சிகளையும் எழுதுக.

(i) விளிம்புகள் - _____ (ii) உச்சிகள் - _____

www.ikedu.lk


20. (i) தரப்பட்டுள்ள எண்கோலத்தில் அடுத்துவர வேண்டிய எண்ணை எழுதுக.

- **3, 7, 12, 18, _____**

(ii) எண்கோலமொன்றை அமைக்க நீக்க வேண்டிய எண்ணை எழுதுக.

4, 6, 8, 11, 12, 15, 16, 16.... _____

21.



(i) உருவில் நிழற்றப்பட்ட பகுதியைப் பின்னமாக எழுதுக.

_____

(ii) மேலே எழுதிய பின்னத்தின் சமவலுப் பின்னமொன்றை எழுதுக. _____

(iii) உருவில் நிழற்றப்படாத பகுதியை தசம எண்ணாக எழுதுக. _____

22. அனுலா, குரு, ரொனி ஒவ்வொருவரும் ரூபா 150 வீதம் சேகரித்த பணத்திலிருந்து ரூபா 210க்கு பழங்கள் வாங்கிய பின்னர், மீதிப் பணத்தைத் தம்மிடையே சமமாகப் பகிர்ந்து கொண்டனர்.

(i) பழங்கள் வாங்கிய பின் எஞ்சிய பணம் எவ்வளவு? _____

(ii) மீதிப் பணத்தில் ஒருவருக்குக் கிடைத்தது எவ்வளவு? _____

23. அமீன் முற்பகல் 8.15 இற்கு நூலகம் வந்து, பிற்பகல் 3.50 வரைக்கும் நூலகத்தில் புத்தகங்கள் வாசித்தான்.


(i) அமீன் நூலகத்தில் தங்கியிருந்த நேரம் எவ்வளவு?
மணித்தியாலம் _____ நிமிடம்_____

(ii) அமீன் வீட்டிற்குப் புறப்பட்ட நேரத்தை இருபத்து நான்கு மணித்தியாலக் கடிகார முறையில் எழுதுக. _____ மணித்தியாலம்

24. ஒரு கலைவிழா மண்டபத்தில் ஒரு நிரையில் 6 கதிரைகள் வீதம் 12 வரிசைகளும், ஒரு வரிசையில் 4 கதிரைகள வீதம் 9 வரிசைகளும் உள்ளன. மண்டபத்தில் இருந்த மொத்தக் கதிரைகள் எத்தனை? _____

25. சதுர வடிவக் காணியொன்றைச் சுற்றிவர 52 தூண்கள் உள்ளன. எனில், சதுரக்காணியின் ஒரு பக்கத்திலுள்ள தூண்களின் எண்ணிக்கை யாது? _____

26.



அருகிலுள்ள உருவைப் பயன்படுத்தி விடை தருக.

(i) உருவினுள்ளே காணப்படும் செங்கோணங்கள் எத்தனை? _____

(ii) உருவினுள்ளே காணப்படும் செங்கோணத்தை விடக் குறைந்த கோணங்கள் எத்தனை? _____

27. 12 மீற்றர் நீளமுள்ள கம்பியொன்றிலிருந்து ஒவ்வொன்றும் 60cm நீளமுடைய எத்தனைக் கம்பித் துண்டுகளை வெட்டியெடுக்கப்பட்டது?

(i) வெட்டியெடுத்த கம்பித் துண்டுகளின் எண்ணிக்கை = _____

(ii) எஞ்சியுள்ள கம்பித் துண்டின் நீளம் = _____

28. ஒரு பையினுள்ளே 68 இனிப்புக்களும், இன்னொரு பையினுள் 38 இனிப்புக்களும் உள்ளன. இவ்விரு பைகளிலும் உள்ள இனிப்புக்கள் சமமாக இருக்க இனிப்புக் கூடுதலாகவுள்ள பையிலிருந்து, இனிப்புக் குறைவாக உள்ள பைக்கு எத்தனை இனிப்புக்கள் இட வேண்டும்? _____

29. ஒரு பிஸ்கற் பெட்டியின் நிறை 375 கிராம் ஆகும். இவ்வாறான 7 பிஸ்கற் பெட்டி களின் நிறை எவ்வளவு? கிலோகிராம் _____ கிராம் _____

30. பொருட்காட்சி ஒன்றுக்காக அனுலா, குரு, சது ஆகியோர் பணம் சேகரித்தனர். இதில் அனுலாவை விட குரு ரூபா 275 அதிகமாக சேரித்தான். குருவை விட சது ரூபா 475 குறைவாகச் சேகரித்தாள். சது சேகரித்த மொத்தப் பணம் ரூபா 950 எனில், மூவரும் சேகரித்த மொத்தப் பணம் எவ்வளவு? _____

☞ **31** தொடக்கம் **60** வரையுள்ள வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிந்தெடுத்து, **அதன்கீழ் கோடிடுக.**

31. இலங்கைக்கேயுரித்தான முலையூட்டி.
(1) கலைமான் (2) யானை (3) சருகுமான் (4) எலி

32. எதிரிகளிடமிருந்து பாதுகாப்புப் பெற உடலின் நிறத்தை சூழலின் நிறத்திற்கு அமைய மாற்றக்கூடிய பிராணி.
(1) பச்சைக்கிளி (2) மலைப்பாம்பு (3) பச்சோந்தி (4) மரத்தவளை

33. கோழிகள் முட்டைகளை அடைகாத்துக் குஞ்சு பொரிப்பதற்கு எத்தனை நாள் தேவை?
(1) 18 (2) 21 (3) 28 (4) 35

34. பழமரங்களின் வித்துக்களைத் தூர இடங்களுக்கு பரம்பலடைய உதவுவது.
(1) அணில் (2) செண்பகம் (3) வானம்பாடி (4) வெளவால்

35. வீட்டுத் தோட்டத்திலுள்ள பயிர்களிலிருந்து சாற்றை உறிஞ்சிக் குடிக்கும் பூச்சிகள் எவை?
(1) மாவிலைத்தத்தி, வெண்மூட்டுப்பூச்சி, பனிப்பூச்சி
(2) பெண் நுளம்பு, தண்டுகோதி, பச்சை வண்டு
(3) வெண்மூட்டுப்பூச்சி, தாவர மூட்டுப்பூச்சி, வெட்டுக்கிளி
(4) ஆண் நுளம்பு, வெண்ஈ, கொப்புள ஈ

36. காடுகளை அழிப்பதால் ஏற்படக்கூடிய இயற்கை அனர்த்தமாக **அமையாதது** எது?
(1) வறட்சி (2) வெள்ளப்பெருக்கு (3) மண்சரிவு (4) இடிமின்னல் தாக்கம்

37. இடிமின்னல் தாக்கம் உள்ள போது செய்யக் கூடாதது எது?
(1) பேருந்தில் செல்லுதல். (3) உணவு உட்கொள்ளல்
(2) காரில் செல்லுதல். (4) ஆற்றில் நீந்துதல்.

38. கிராமிய மீனவர்கள் சிறுகுளம், ஆறுகளில் மீன் பிடித்து, அதனைப் போடும் கூடை எவ்வாறு அழைக்கப்படும்?

(1) மடி (2) பறி (3) நாம்புவ (4) அவுரி

39. மீன்களை மட்டும் உணவாக உண்ணும் பிராணி.

(1) மீன்கொத்தி (2) கடற்காகம் (3) கொக்கு (4) தாரா

40. மீனவர்கள் கடலில் தோணியை நிறுத்தி வைக்க உதவுவது எது?

(1) கொல்லா (2) சவள் (3) நங்கூரம் (4) அணித்தம்

41. இரவுவேளையில் பூக்கும் பூக்களின் வகைகள்.

(1) சாமந்தி, கடுபுல், தாமரை (2) பவளமல்லிகை, தாழம்பூ, பட்டிப் பூ
(3) மல்லிகை, அந்திமந்தாரை, கார்த்திகைப்பூ
(4) கொடிமல்லிகை, கடுபுல், அல்லிமலர்


42. வீட்டு ஈ மொய்த்த உணவை உண்பதால் ஏற்படக் கூடிய நோயாக அமையாதது எது?

(1) கழிச்சல் நோய் (2) வாந்திபேதி (3) வயிற்றுளைவு (4) மஞ்சட்காமாளை

43. வீட்டுத்தோட்டம் அமைப்பதால் ஏற்படக் கூடிய பயனாக **அமையாதது.**

(1) புத்தம் புதிய காய்கறி கிடைத்தல்.
(2) நச்சுத் தன்மையில்லாத காய்கறி கிடைத்தல்.
(3) அதிக பணச் செலவும், அதிகளவு நேரமும் தேவை.
(4) மேலதிக காய்கறிகளை அயலவர்களுக்குக் கொடுக்கலாம்.

44.



உருவிலுள்ள குறியீடு.

(1) இலங்கைக் கட்டளைப் பணியகம்.
(2) வீதி அபிவிருத்தித் திணைக்களம்
(3) பெருந் தெருக்கள் அதிகார சபை
(4) வீதி அபிவிருத்தி அதிகார சபை

45. சப்பிரகமுவ மாகாணத்திலுள்ள நகரம்.

(1) பலாங்கொடை (2) லுணுகல (3) மதோ (4) நீர்கொழும்பு

46. இலங்கைக்கு மிகவும் அருகிலுள்ள தீவுக்கூட்டம்.

(1) மலேசியா (2) சிங்கப்பூர் (3) மாலைதீவு (4) மடஸ்கார்

47. இலங்கையின் தேசிய விளையாட்டில் ஒரு அணியில் விளையாடும் வீரர்களின் எண்ணிக்கை.

(1) 6 (2) 7 (3) 11 (4) 12

48. சூரியனிலிருந்து கோள்கள் அமைந்துள்ள ஒழுங்குமுறையைக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

(1) புதன், செவ்வாய், பூமி (3) புதன், பூமி, செவ்வாய்
(2) புதன், சுக்கிரன், பூமி (4) புதன், வியாழன், செவ்வாய்

49.



அருகிலுள்ள வீதிக் குறியீடு காணப்படும் இடங்களில் ஒன்று.

(1) பாடசாலை (3) நீதிமன்றம்
(2) பிரதேச செயலகம் (4) மாவட்டச் செயலகம்

50. வீட்டுத் தோட்டத்தில் பயன்படுத்தும் உபகரணங்களை மட்டும் கொண்ட கூட்டம்.
(1) கலப்பை, பூவாளி, மண்வெட்டி
(2) கைமுள்ளு, மண்வெட்டி, பூவாளி
(3) பூவாளி, கைக்கரண்டி, மண்வெட்டி
(4) முள்ளு மண்வெட்டி, கலப்பை, கைக்கரண்டி

51. இயற்கை விவசாயம் தொடர்பில் **தவறான கூற்று.**
(1) பயிருக்கு மாட்டெரு, கூட்டெரு பசளையாகப் பயன்படுத்தப்படும்.
(2) பூச்சி பீடைகளை விரட்ட இயற்கைப்பூச்சி விரட்டி விசிறப்படும்.
(3) பயிருக்கு இரசாயன வளமாக்கி பாவிப்பதில்லை.
(4) மரபணு மாற்றப்பட்ட வித்துக்கள் பயிரிடப்படும்.

52. இலங்கையின் தேசிய அடையாளமாக அமையும் பிராணி.
(1) சிறுத்தை (2) யானை (3) மரஅணில் (4) காட்டுக்கோழி

53. ஒருவர் மாத்திரம் தனியாகப் பயன்படுத்தும் பொருட்கள்.
(1) பற்தூரிகை, நகம்வெட்டி, போர்வை
(2) காலுறை, பற்பசை, சவர்க்காரம்
(3) கைக்குட்டை, தலையணை, போர்வை
(4) பற்தூரிகை, கைக்குட்டை, குடை

54. அலுமினியப் பாத்திரத்தில் கறி சமைக்கும் போது, கறிக்கு எப்பதார்த்தத்தைச் சேர்க்கக்கூடாது?
(1) கறியுப்பு (2) சீரகம் (3) தேசிப்புளி (4) கறுவாப்பட்டை

55. இலங்கையின் தேசிய அடையாளமாக **அமையாதது.**
(1) நிறைகுடம் (2) வொலிபோல் (3) அல்லிமலர் (4) நாகமரம்

56. பின்வரும் எப்பதார்த்தத்தை நீரினுள் சேர்க்கும் போது, நீரின் மீது மிதக்கும்?
(1) வினாகிரி (2) வனிலா (3) நெய் (4) தேன்




57. இரவு வானில் அவதானிக்கக் கூடிய வியப்பூட்டும் நிகழ்வாக **அமையாதது.**
(1) விண்கல் பொழிவு (3) சந்திர கிரகணம்
(2) வால்வெள்ளி தோன்றுதல். (4) சூரிய கிரகணம்



58. புராதன காலத்தில் பலாச்சுளையை நீண்டகாலம் பேணிகாத்த முறை.
(1) வெயிலில் உலர்த்துதல். (3) உப்பிட்டு வைத்தல்.
(2) தேனில் அமிழ்த்தி வைத்தல். (4) ஜாம் தயாரித்தல்.

59. ஒரு குறித்த பிரதேசத்தில் வாழும் மக்களுக்கு இயற்கை அனர்த்தம் தொடர்பான அவசர எச்சரிக்கையை வழங்க உதவுவது.
(1) தொலைக்காட்சி (2) ஒலிபெருக்கி (3) வானொலி (4) பத்திரிகை

60. வேலையை இலகுவாக்கும் எளிய பொறியையும், அப்பொறியுடன் தொடர்புடைய செயற்பாட்டையும் காட்டும் விடை.
(1) பாக்குவெட்டி - தள்ளுதல் (3) குறடு - தள்ளுதல்
(2) கப்பி - இழுத்தல் (4) கைவண்டி - வெட்டுதல்.

இல : 10 - A வினாத்தாள் - I இன் விடைகள்

வினா இல	விடை இல	விடை
1	3	
2	2	
3	3	 1ம் விடை - தோல் இசைக்கருவி 2ம் விடை - துளை / காற்றுக்கருவி 3ம் விடை - ✗
4	1	 1ம் விடை - 8 கால் பூச்சியுண்டு ✗ 2ம் விடை - முலையூட்டிகள் 3ம் விடை - பறவைகள்
5	2	60 $3 \times 5 = 15$, $15 \times 4 = 60$
6	3	20 $4^2 \times 2^2 = 16 + 4 = 20$
7	3	A C G D B E F I
8	3	CDAB
9	2	
10	2	• Ja - 31 • Feb - 28 • Mar - 31 • Ap - 30 + • Ma - 31 151

வினா இல	விடை இல	விடை
11	2	• பேருந்து ⇨ $\frac{21\not{0}}{5\not{0}}$ = 4.2 மணி (2) ∴ சென்ற நேரம் ⇨ 6.30 + 4.12 = மு.ப. 10.42 • கார் ⇨ $\frac{21\not{0}}{7\not{0}}$ = 3 மணி (1) ∴ சென்ற நேரம் ⇨ 7.00 + 3.00 = மு.ப. 10.00 • சிற்றூர்ந்து ⇨ $\frac{21\not{0}}{6\not{0}}$ = 3.30 மணி (3) ∴ சென்ற நேரம் ⇨ 7.30 + 3.30 = மு.ப. 11.00 கார், பேருந்து, சிற்றூர்ந்து
12	1	மு.ப. 11.00
13	1	1ம் விடையில் வரும் லீற்றர் தவறானது. ★ கிலோகிராம் ★ கிராம் ★ மில்லிகிராம் ★ லீற்றர்
14	2	2 வருடத்திற்கு ரொனி அனுலா முன் ⇨ 4 10 6 12 தற்போது ⇨ 1மடங்கு 2மடங்கு
15	2	 $= \frac{1}{7}$
16	2	$\frac{1}{4} + \frac{1}{8} = \frac{2}{8} + \frac{1}{8}$ $= \frac{3}{8}$ 
17	1	
18	2	$\frac{1}{6} = 12$ $6 \times 12 = 72$

www.ikeou.lk

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk || www.lkedu.lk

76667-4945

பாலர் வகுப்பு முதல் A/L வரை

தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல

- ICT
- Maths
- English
- Tamil
- History
- Science

zoom Online வகுப்புக்கள்

" மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான் "












Contact

76667-4945

தனித்துவமான
புலமைப்பரிசில் பரீட்சை
வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5
வரை நடைபெறுகின்றன

வினா இல	விடை இல	விடை
19	1	
20	3	• விகட கவி  • அகட விகடம் 
21	3	உரு B யை விட, உரு A யில் முகங்களின் எண்ணிக்கை குறைவு.
22	2	 8km இல் அரைவாசி = 4km
23	2	கடிகாரம் காட்டும் உண்மை நேரம் = பி.ப. 1.35 4.30 + 6.05 ∴ பி.ப. 6.05 65
24	3	1 பந்து = 345 ÷ 3 = 115/= 1 கிரிக்கட்மட்டை = 505 - 115 = 390 ÷ 2 = 195/- 115/- + 195/- = 310/=
25	3	345/- + 505/- ரூபா 850
26	3	9
27	1	TIB RAR
28	3	BCF
29	1	B

வினா இல	விடை இல	விடை
30	2	40km
31	1	 ∴ 12 - 10 = 2 பேர்
32	2	83
33	2	
34	3	
35	2	2
36	2	3
37	3	Bயும், Eயும்
38	2	★ கட்டில் ★ மேசை ★ கதிரை — தளபாடங்கள்
39	2	★ உளி ★ கைவாள் ★ கோடரி — வெட்டும் உபகரணங்கள்
40	3	 = மொத்தப் பரப்பு = 120cm²

- ஒவ்வொரு விடைக்கும் $2\frac{1}{2}$ புள்ளிகள் வீதம் 40 வினாக்களுக்கும் 100 புள்ளிகள் வழங்குக.
- விடைகள் ஒற்றை எண் இலக்கத்தில் வருமாயின்.....
  - * 10 விடைகள் சரி எனில் - $10 \times 2\frac{1}{2}$ = 25 புள்ளிகள்
  - * 11 விடைகள் சரி எனில் - 25 + 3 புள்ளி = 28 புள்ளிகள்

வினாத்தாள் - II

இல : 10 - B **விடைகள்**

(01) (i) கடிதங்களை அச்சுப் பொறித்துப் பிரதிகள் எடுக்கலாம். / தூரப் பிரதேசங்களில் வாழ்பவர்களுக்கு மின்னஞ்சல் மூலம் எமது ஒளிப்படங்களையும், தகவல்களையும் அனுப்பலாம். (1 புள்ளி)
(ii) இணையம் (1 புள்ளி) (iii) மின்னஞ்சல் (1 புள்ளி) (iv) கடிதங்கள் (1 புள்ளி)
(v) மனிதர் (1 புள்ளி) (vi) கணினி (1 புள்ளி)

(02) (i) கூரை (1 புள்ளி) (ii) ஊன் (1 புள்ளி)

(03) (i) பயன்மிக்கவை. (1 புள்ளி) (ii) தங்க நகை (1 புள்ளி)
(iii) பரவியது. (1 புள்ளி) (iv) வாழ்கின்றன. (1 புள்ளி)

(04) (i) நன்மை, தீமை அறியாதவன். (1 புள்ளி) (ii) முழுக் கவனத்துடன் (1 புள்ளி)
(iii) பொறாமை (1 புள்ளி)

(05) உலகத்தோடு ஒத்தே (1 புள்ளி)

(06) இடர்வரும் போதும், உள்ளம் இரங்கிடும் போதும் (1 புள்ளி)

(07) இரையும் (1 புள்ளி)

(08) (i) ஐயா, உங்களுடன் நான் கதைக்க வேண்டும். (1 புள்ளி)
(ii) உலை வாயை மூடலாம் ; ஊர் வாயை மூட முடியுமா? (1 புள்ளி)

(09) (i) அஹிம்சை (ii) சுயசரிதை (iii) சத்தியாக்கிரகம் (3 புள்ளி)

(10) சிறந்த நூல்கள் நல்ல நண்பர்களைப் போன்றன. (1 புள்ளி)

(11) (i) have (1 புள்ளி) (ii) am (1 புள்ளி)

(12) (i) நாங்கள் பூக்களைப் பறிக்க முடியுமா? (1 புள்ளி)
(ii) தயவு செய்து தினமும் பாடசாலைக்கு வாருங்கள். (1 புள்ளி)

(13) How are you? (2 புள்ளி)

(14) (i) ஞாயிறு (ii) குரங்கு (2 புள்ளி)

(15) (i) மே மகே பு(ட்)டுவ (ii) லமாய் செல்லம் கரணவா (2 புள்ளி)

(16)
- முதல் மூன்று வாக்கியங்களுக்கு 2 புள்ளி வீதம் 6 புள்ளிகள் வழங்கப்படும்.
- எழுவாய், பயனிலைத் தொடர்பு, எழுத்துக்கூட்டல் பிழையாக இருப்பின் புள்ளி வழங்கப்படமாட்டாது.
- ஒரு வாக்கியத்தில் ஒரு எழுத்துப் பிழை மட்டும் இருப்பின் ஒரு புள்ளி வழங்கப்படும்.

(17) (i) ஒன்பதாயிரத்து அறுபத்தேழு (1 புள்ளி) (ii) 10,000 → 0 (பூச்சியம்) (1 புள்ளி)

(18) 8654 - 4568 = 4086 (2 புள்ளி)

(19) (i) 12 (ii) 8 (2 புள்ளி)

(20) (i) 3, 7, 12, 18, 25 (+4, +5, +6, +7) (1 புள்ளி)

(ii) 4, 6, 8, 11, 12, 15, 16, 16 (45, 45; +4, +4, +4) (1 புள்ளி)

www.ikeou.lk

(21) (i) $\frac{4}{10} = \frac{2}{5}$ (ii) $\frac{2}{5} = \frac{4}{10} = \frac{6}{15}, \frac{8}{20}$ (iii) 0.6 (3 புள்ளி)

(22) (i) 450/- - 210/- = 240/- (ii) 240 ÷ 3 = 80/= (1 புள்ளி)

(23) (i)

மணி	நிமி
15	5 0
− 8	1 5
7	3 5

(ii) 15 : 50 மணித்தியாலம்

7 மணித்தியாலம் 35 நிமிடங்கள் (2 புள்ளி)

(24) 6 × 12 ⇨ 72
4 × 9 ⇨ 36
108

(25) 52 ÷ 4 = 13 தூண்கள்

(26) (i) 5 (ii) 01

(27) (i) 20 (ii) மிகுதி இல்லை

(28) ● 68 + 38 = 106 இனிப்புக்கள்
● 106 ÷ 2 = 53 இனிப்புக்கள்
● 68 - 53 = 15 இனிப்புக்கள்

(29) (i) 375 × 7 = 2kg 625g

(30) ● சது சேகரித்த மொத்தப் பணம் - 950/-
● குரு சேகரித்த மொத்தப் பணம் - 950/- + 475/- = 1425/- +
● அனுலா சேகரித்த மொத்தப் பணம் - 1425/- - 275/- = 1150/-
3525/-

(31) (3) - சருகுமான் (1 புள்ளி)

(32) (3) - பச்சோந்தி (1 புள்ளி)

(33) (2) - 21 (1 புள்ளி)

(34) (4) - வெளவால் (1 புள்ளி)

(35) (1) - மாவிலைத்தத்தி, வெண்மூட்டுப் பூச்சி, பனிப்பூச்சி (1 புள்ளி)

(36) (4) - இடிமின்னல் தாக்கம் (1 புள்ளி)

(37) (4) - ஆற்றில் நீந்துதல் (1 புள்ளி)

(38) (2) - பறி (1 புள்ளி)

(39) (1) - மீன்கொத்தி (1 புள்ளி)

(40) (3) - நங்கூரம் (1 புள்ளி)

(41) (4) - கொடிமல்லிகை, கடுபுல், அல்லிமலர் (1 புள்ளி)

(42) (4) - மஞ்சட்காமாளை (1 புள்ளி)

(43) (3) - அதிக பணச்செலவும் அதிகளவு நேரமும் தேவை. (1 புள்ளி)

(44) (4) - வீதி அபிவிருத்தி அதிகார சபை (1 புள்ளி)

(45) (1) - பலாங்கொடை (1 புள்ளி)

(46) (3) - மாலைதீவு (1 புள்ளி)

(47) (1) - 6 (1 புள்ளி)

(48) (2) - புதன், சுக்கிரன், பூமி (1 புள்ளி)

(49) (3) - நீதிமன்றம் (1 புள்ளி)

(50) (2) - கைமுள்ளு, மண்வெட்டி, பூவாளி (1 புள்ளி)

(51) (4) - மரபணு மாற்றப்பட்ட வித்துக்கள் பயிரிடப்படும். (1 புள்ளி)

(52) (4) - காட்டுக்கோழி (1 புள்ளி)

(53) (3) - கைக்குட்டை, தலையணை, போர்வை (1 புள்ளி)

(54) (3) - தேசிப்புளி (1 புள்ளி)

(55) (1) - நிறைகுடம் (1 புள்ளி)

(56) (3) - நெய் (1 புள்ளி)

(57) (4) - சூரிய கிரகணம் (1 புள்ளி)

(58) (2) - தேனில் அமிழ்த்தி வைத்தல். (1 புள்ளி)

(59) (2) - ஒலிபெருக்கி (1 புள்ளி)

(60) (2) - கப்பி - இழுத்தல் (1 புள்ளி)

www.keou.lk